நலமே

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி

நிறுவுநர் நினைவுப் பேருரை

05.02.2008

வைத்தியகலாநிதி.சி.எஸ்.யமுனாநந்தா MBBS, DTCD

மாவட்ட காச நோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி (DTCO), யாழ்ப்பாணம்.

பணிப்பாளர், பிராந்திய நிலையம், பண்ணை. (Director, RTC, Jaffna).

பதில் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய், (Acting MOH, Kopay).

பொறுப்பு வைத்திய அதிகாரி, மார்புநோய் வைத்தியசாலை, (MO/IC, Chest Hospital, KKS).

ஆரோக்கியத்திற்கான கல்வியும்
கல்விக்கான ஆரோக்கியமும்
ஆரோக்கியமான கற்றலும்

Education for Health and Health for Education and Health Learning

வைத்தியகலாநிதி.சி.எஸ்.யமுனாநந்தா MBBS, DTCD

மாவட்ட காச நோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி (DTCO), யாழ்ப்பாணம்.

பணிப்பாளர், பிராந்திய நிலையம், பண்ணை. (Director, RTC, Jaffna).

பதில் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய், (Acting MOH, Kopay).

பொறுப்பு வைத்திய அதிகாரி, மார்புநோய் வைத்தியசாலை, (MO/IC, Chest Hospital, KKS).

ஆரோக்கியத்திற்கான கல்வியும் கல்விக்கான ஆரோக்கியமும் ஆரோக்கியமான கற்றலும்

Dr. C. S. யமுனாநந்தா,
MBBS, DTCD

ஆரோக்கியத்திற்கான கல்வி

கல்வி என்பது ஒரு தனி நபரின் ஆரோக்கியத்திற்கும் சமூகத்தின் ஆரோக்கியத்திற்கும் இன்றி அமையாதது. கல்வியினை பணத்தினை ஈட்டுவதற்கான முதலீடாக மட்டும் கொள்ளாது சமூக இயக்கத்தின் மொழியாகக் கொள்ளல் வேண்டும். இதனாலேயே இந்துக்கள் கல்வியை சரஸ்வதியாக வணங்குகின்றனர்.

எமது சமூகம் 99% கல்வி அறிவுடையவர்களாக மாறும்போது சமூக ஆரோக்கியமும் சிறந்த அடைமானத்தினை அணுகும். தனி நபரின் ஆரோக்கியம் முன்பள்ளியிலேயே தொடங்குகின்றது. பற்சுகாதாரத்தில் பல்துலக்கல், தூரிகையின் உபயோகம், உணவு உட்கொண்ட பின் பல் கழுவுதல் என்பன முன்பள்ளியிலேயே விளக்கப்படுத்துவதால் சிறுவர்களின் பற்சூத்தை ஏற்படுவதனை முற்றாகக் குறைக்கலாம். போசாக்கு உணவு ஊட்டலும் முன்பள்ளியில் கவனிக்கப்படுகின்றது. பாடசாலை மருத்துவப் பரிசோதனையில் ஏற்புவலித்தடுப்பு மருந்து ஏற்றல் டுபெல்லாத்தடுப்பு மருந்து என்பன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. ஆண்டு 1, 4, 7, 10 மாணவர்களிற்கு மருத்துவப் பரிசோதனை சுகாதார வைத்திய அதிகாரியினால் நடாத்தப்படுகின்றது. ஆண்டு 1இல் பற்சூத்தை, இதய நோய்கள், வளர்ச்சிக்குறைபாடுகள், கேட்டல்குறைபாடுகள், உளநலக் குறைபாடுகள் கண்டறியப்பட்டு விசேட சிகிச்சைக்கு வழிகாட்டப்படுகின்றது. எனவே பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லலும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படலும் மிகவும் இன்றியமையாதது.

ஆண்டு 4, 7 இல் பேன், சிரங்கு, குடற்புழுக்களின் தாக்கம் என்பவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. ஆண்டு 10இல் உடல்நிறை அல்லது உடற்திணிவுச்சுட்டி 20க்கு மேல் இருப்பதற்கு வழிகாட்டப்படுகின்றது. மேலும் யௌவனப்பருவத்து மாறல்களினால் ஏற்படும் உளத்தாக்கங்கள், இனப்பெருக்கக்கல்வி, பாலியல் நோய்த்தடுப்பு, போதைப்பொருள் பாவனைத்தடுப்பு, மதுபாவனை, புகைத்தல் என்பவற்றின் தீங்குகள் விளக்கப்படுகின்றன.

பாடசாலைச் சுகாதாரக்கல்வியில் தொற்றுநோய்த்தடுப்புப்பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது. உணவு, நீர் மூலம் பரவும் நோய்களாக வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் என்பவற்றைக் கட்டுப்படுத்த கொதித்தாறிய நீரைப்பருகல், உணவு கையாளலில் சுத்தமான முறைகளை உபயோகித்தல் பற்றிக்கூறப்படுகின்றது. நுளம்பின்மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா என்பவற்றைக் கட்டுப்படுத்த நுளம்பு பெருகும் இடங்களான நீர்தேங்கும் சிற்றிடங்களை அழித்தல்பற்றிக் கூறப்படுகின்றது. காற்றின்மூலம் பரவும் நோயான காசநோயினைக் கட்டுப்படுத்த இருமும்போதும் தும்மும்போதும் கைக்குட்டையைப் பாவித்தல், மூன்றுகிழமைகளுக்குமேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை செய்தல் அவசியம் என்பது பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றது. மனித நேயத்தினை வளர்க்க அறநெறிக்கல்வியும், முதல் உதவிக் கல்வியும் உதவுகின்றது. மேலும் முதலுதவிக்கல்வி அநாவசிய விபத்துக்களினால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்க்க உதவுகின்றது.

பாடசாலைகளில் உடற்பயிற்சி வழங்கப்படலும் உடற்பயிற்சியின் அவசியம் பற்றிக் கற்பிக்கப்படலும் பிற்காலத்தில் இதயநோய், சலரோகநோய் வாராதுதடுக்கும். மேலும் நெருக்கீட்டினை எதிர்கொள்ளவும் உதவும். சமூக உளத்தாக்கங்கள் பற்றிய கல்வியும், தற்கொலைத்தடுப்பு விழிப்புணர்வு முரண்பாடுகளில் இருந்து விலகல் என்பனவும், ஆரோக்கியத்தினை நோக்கி நகர்த்தும்.

ஆசிரியர்களே எதிர்காலத்தினை உருவாக்கும் மாணவர்களின் சிற்பிகள். ஆசிரியர்களே சிறந்த சமூகப் பொறியியலாளர்கள், ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 12 வரை உள்ள மாணவர்களிற்கு சிறந்த இலட்சியத்தினை ஆசிரியர்கள் புகட்டுவதிலேயே மாணவர்கள் சிறந்த அறிஞர்களாக, சமூகப்பற்றுள்ளவர்களாக தமது குடும்பத்திற்கும் தமது சமூகத்திற்கும் சேவை செய்பவர்களாக உருவாக முடியும்.

கல்விக்கான ஆரோக்கியம்

சிறந்த ஆரோக்கியம் அமைந்தாலேயே கல்வியினைச் சிறப்பாகக் கற்கலாம். இதற்கு அடிப்படை பிறப்புநிறை. பொதுவாக பிறப்புநிறை 3 கிலோவிற்கு மேல் இருத்தல் அவசியம். இதற்கு தாய்மாரின் உடற்திணிவுச்சுட்டி 19ற்கு மேல் இருத்தல் அவசியம். மேலும் பிற்காலத்தில் உடல்நிறை அதிகரிப்பு 10 கிலோ அளவில் இருத்தல் அவசியம். முதல் 6

மாதங்களிற்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கப்படல் வேண்டும். கடலுணவுகளின் மூளை வளர்ச்சிக்கு அவசியமானசத்துக்கள் அதிகம் உண்டு 5 வயது வரை குழந்தையின் மூளை வளரும். இதில் முதல் 2 வயது வரை அதிக அளவில் நடைபெறும். எனவே இவ்வயதில் போதிய போசாக்கு உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடல்நிறை அதிகரிப்பை அவதானிக்க வேண்டும். இன்னிசையை குழந்தைகள் இரசிக்க வேண்டும். பாரிய சத்தங்களைக் குழந்தைகள் கேட்கக்கூடாது இவை குழந்தைகளியின் நுண்ணறிவு விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

முன்பள்ளியில் ஆடல், பாடல், அபிநயம் என்பவற்றை கற்றல் நல்லது.

1ம், 2ம் வகுப்புக்களில் தமிழ், கணிதம், சமயம் என்பவற்றை கற்றல் நல்லது.

3ம், 4ம், 5ம் வகுப்புகளில் ஆங்கிலம், தமிழ், கணிதம் என்பவற்றை நன்றாக கற்றல் வேண்டும்.

5ம் ஆண்டுப் புலமைப்பரீட்சை போட்டிப்பரீட்சையாக அமைவதால் சிறந்த முறையில் வினாக்களிற்கு விடையளிக்க பயிற்றப்படல் வேண்டும்.

6ம், 7ம், 8ம், 9ம், 10ம், 11ம் வகுப்புகளில் ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் சங்கீதம், சித்திரம், முதலுதவிக்கல்வி என்பவற்றில் அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

12ம், 13ம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெறமுயற்சிக்க வேண்டும்.

ஆரோக்கியமான கற்றல்

"க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த மதிப்பெண்களைப் பெற எவ்வாறு கற்க வேண்டும்".

என்பதற்கு விடைகான யாழ்ப்பாணத்தில் இரண்டு பிரதான தேசியப்பாடசாலைகளில் ஒன்று ஆண்கள் பாடசாலை மற்றையது பெண்கள்

பாடசாலையில் 2008 A/L, 2009 A/L மாணவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து சில விடயங்களைக் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கல்வி கற்றலில் குறிப்புகள் எடுத்தல், மாதிரி வினா, விடைகள், ஆராய்ந்து கற்றல் என்பன முக்கியமானவை. பரீட்சைக்கு முதல் நாள் சாதாரணமான கற்றலை 60% மாணவர்களும் தெரிவுசெய்து கற்றலை 30% மாணவர்களும் மேற்கொள்கின்றனர். இதன் விளைவு ஏற்கனவே பாடவிதானத்தனை கற்ற அளவிலேயே தங்கியுள்ளது.

தனிமையாகக் கற்பதனை 65% மாணவர்களும் நண்பர்களுடன் சேர்ந்து கற்பதனை 35% மாணவர்களும் மேற்கொள்கின்றனர். பரீட்சைக்கு அதிக பலனைப் பெற இறுதியில் தனிமையாகக் கற்றல் அவசியம்.

கற்கும் நேரத்தினை கருதும் போது 70% மானோர் இரவிலேயே அதாவது 6 மணி தொடக்கம் 10 மணி வரை கல்வி கற்கின்றனர். எனவே இந்நேரத்தில் அவர்களின் இல்லங்களில் வானொலிப்பெட்டியோ, தொலைக்காட்சியோ இயங்குதல் கட்டாயம் தவிர்க்கப்படல் வேண்டும். அதிகாலையில் கற்றலை 17% மான மாணவர்கள் மேற்கொள்கின்றனர்.

நேரசூசியையினை தயாரித்து அதற்கு ஏற்ப 33% கற்கின்றனர். 66% நேரசூரிகை இல்லாது எழுந்தமானமாகக் கற்கின்றனர். நேரசூசிகை தயாரித்து கற்றால் மிகவும் பிரயோசனமாக நேரத்தினை உபயோகிக்கலாம்.

உயர்தர மாணவர்களில் 75% தினமும் கற்கின்றனர். 20% மானோர் கிழமையில் 4 நாட்களும் 5% மானோர் பரீட்சைக்கு முதலும் கற்கின்றனர். தினமும் கல்வி கற்றலே சாலச் சிறந்தது.

மாணவர்கள் தினமும் கற்றலுக்கு செலவிடும் நேரத்தினை ஆராய்ந்தபோது 50% மாணவர்கள் 2 - 4 மணித்தியாலங்களையும் 30% மான மாணவர்கள் 2 மணித்தியாலங்களையும் சுயமாகக் கற்பதற்குச் செலவிடுகின்றார்கள்.

க.பொ.த உயர்தரம் போட்டிப்பரீட்சை ஆகையால் தினமும் 6 மணித்தியாலங்கள் சுயமாகக் கற்றல் அதிக பெறுபேற்றினைத்தரும்.

மாணவர்கள் தொடர்ச்சியாகக் கற்கும் நேரத்தினை ஆராய்ந்தபோது 30% மானோர் 1 மணித்தியாளத்திற்குள்ளும், 42% மானோர் 1-2 மணித்தியாலத்திற்குள்ளும், 6% மானோர் 3 மணித்தியாலத்திற்குள்ளும் தொடர்ச்சியாக கற்கின்றனர். தொடர்ந்து கற்கும்போது 45 நிமிடங்களிற்கு பிறகு 15 நிமிடங்கள் ஓய்வுகொடுத்தல் அவசியம்.

மாணவர்களிற்கு பாடவிதான தகவல்களை முதலில் புகட்டியதை ஆராய்ந்தட போது

தனியார் கல்வி நிலையங்களில் இருந்து 61% உம் பாடசாலை வகுப்புகளில் இருந்து 19% உம், புத்தகங்களில் இருந்து, 17% உம், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்பவற்றில் இருந்து 1% உம் கணனி வலையமைப்பில் இருந்து 2% கிடைக்கப்பெற்றதாக கூறப்பட்டது. எனவே மாணவர்களின் கல்வியில் சிறந்த பெறுபேற்றினை அடைய தனியார் கல்வித நிறுவனங்கள் மிகப் பெரிய பங்களிப்பை செய்கின்றன. கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற ஆசிரியர்கள் உதவுதல் அவசியம்.

கல்வி கற்கும் முறையினை ஆராய்ந்தபோது ஒவ்வொரு பாடத்தினையும் முதலில் இருந்து கடைசி வரை ஒழுங்காகக் கற்பவர்களை 40% ஆகவும்த கேள்விக்கு ஏற்ப பாடத்தினைப் படிப்பவர்கள் 23% ஆகவும் எழுந்தமானமாகக் கற்பவர்கள் 23% ஆகவும் காணப்பட்டது. முதலில் ஒழுங்காகவும் பின்பரீட்சைக்கு முதல் கேள்விகளுக்கு ஏற்ப கற்றலும் இன்றியமையாதது.

கிரகிக்கும் தன்மையினை அதிகரிக்க மனதில் நினைத்து மீட்டலை 20% ஆனோரும் எழுதி, வரைந்து மீட்டலை 15% ஆனோரும் நண்பர்களுடன் கலந்துரையாடி மீட்டலை 15% ஆனோரும் கடந்த கால வினாக்களிற்கு விடையளித்து 50% ஆனோரும் மேற்கொள்கின்றனர். எழுதி வரைந்து மீட்டலும் கடந்தகால வினாக்களை நேரம் குறித்து பரீட்சித்துப் பார்த்தலும் கிரகிக்கும் தன்மையினை அதிகரிப்பதுடன் பரீட்சையிலும் நல்ல மதிப்பெண்ணைப் பெற்றுத்தரும்.

கடந்தகால வினாககளிற்கு விடையளிக்கும் முறையினை ஆராய்ந்தபோது தினமும் மேற்கொள்பவர்கள் 15% ஆகவும் ஒவ்வொரு பாடமுடிவில் மேற்கொள்பவர்கள் 60% ஆகவும் பரீட்சைக்கு முதல் மேற்கொள்பவர்கள் 25% ஆகவும் அமைந்தது. ஒவ்வொரு பாட முடிவிலும் மேற்கொள்ளல் மிகவும் இன்றியமையாதது.

வகுப்பறையில் கற்றதினை மீட்பது பற்றி ஆராய்ந்த போது பாடம் முடிந்த உடனே 2% ஆனோரும் அன்றைய தினமே மீட்பவர்கள் 19% ஆகவும் ஒரு கிழமைக்கு முன் மீட்பவர்கள் 32% ஆகவும் பரீட்சைக்கு முதல் மீட்பவர்கள் 43% ஆகவும் ஒருபோதும் மீட்காதவர்கள் 4% ஆகவும் அமைந்தது. பரீட்சையில் சிறந்த மதிப்பெண்ணைப்பெறக் கற்றவற்றை அன்றைய தினமே மீட்டல் அவசியம்.

வகுப்பறையில் கற்கும் போது பாடங்களை ஒழுங்காகக் கிரகித்தலை 50% ஆனோர் செய்கின்றனர். முக்கிய குறிப்புகளை எடுத்தலை 40% ஆனோர் செய்கின்றனர். நித்திரை கொள்ளலை 3% செய்கின்றனர். வேறு வேலைகளை 7% செய்கின்றனர். வகுப்பறையில் ஒழுங்காகக் கிரகித்தல் இன்றி அமையாதது.

ஆய்வுகூட நடைமுறைகள் படித்தவற்றை மேலும் விளங்க உதவுவதாக 30% ஆனோரும் நீண்டகால ஞாபகத்தினை ஏற்படுத்துவதாக 65% ஆனோரும் கூறுகின்றனர்.

தனியார் கல்வி நிலையத்திற்கு சென்று கற்பதற்கான காரணமாக மேலும் அறிவினை அறிதலை 60% ஆனோரும் பாடசாலைக் கல்வி போதாமை என்பதனை 40% ஆனோரும் கூறுகின்றனர்.

75 வீத மாணவர்கள் ஒரு பாடத்திற்கு ஒருவரிடம் தனியார் கல்வி நிலையத்தில் கற்கின்றனர். 22 வீதமானோர் ஒரு பாடத்திற்கு 2 இடத்தில் தனியார் கல்வி கற்கின்றனர். 2 வீதம் ஒரு பாடத்திற்கு 2 இற்கு மேற்பட்ட வகுப்புக்களிற்குச் செல்கின்றனர். 1 வீதமானோர் தனியார் கல்விக்கூடத்திற்கே செல்வதில்லை.

க.பொ.த பரீட்சை ஆகையாலும் அதிக அளவு தகவல்கள் தனியார் கல்வி நிலையங்களில் இருந்து பெறப்படுவதாலும் தனியார் கல்வி நிலையங்களிற்கு செல்லல் அவசியம் ஆகின்றது. ஆனால் ஒரு பாடத்திற்கு ஒரு இடத்திலேயே கற்றல் மிகவும் நல்லது. ஏனெனில் சுயமாகக் கற்பதற்கு போதிய நேரம் ஒரு நாளில் ஒதுக்க வேண்டும்.

மாதப் பரீட்சைகள் பற்றி ஆராய்ந்தபோது அவை பிரதான பரீட்சைக்கு உரிய பயிற்சியினைத் தருகின்றது என 40 வீதமானோரும் பாடவிதானத்தில் கற்றவற்றில் குறைவான விடயங்களை அடையாளம் காண உதவுகின்றது என்று 56 வீதமானோரும் கருதினர்.

பரீட்சைக்கு முதல்நாள் இரவு நித்திரையின்றி கற்றது 5 வீதமானோரும் வழமையான கற்றலை 25 வீதமானோரும் கடந்த கால வினாக்களை கற்றலை 23 வீதமானோரும் எல்லாப் பாடங்களையும் மேலோட்டமாக படித்தது 35 வீதமானோரும் நீண்ட நேரம் நித்திரை செய்வதனை 9 வீதமானோரும் ஒன்றுமே படியாது இருந்தது 3 வீதமானோரும் மேற்கொள்கின்றனர்.

பரீட்சைக்கு முன் நித்திரை இன்றிக் கற்றல் தவிர்க்கப்படல் வேண்டியது.

மாணவர்கள் கற்கும்போது பல்கலைக்கழகத்தின் குறித்த பீடத்தினை அடைய வேண்டும் என்ற இலக்கில் கற்றல் 77 வீதமாகவும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வேண்டும் என்று கற்றல் 11 வீதமாகவும் நல்ல பரீட்சை முடிவு வேண்டிக் கற்றல் 11 வீதமாகவும் பரீட்சையில் சித்தியடைய வேண்டிக் கற்றல் 1 வீதமாகவும் உள்ளது.

உயர் இலக்கு வைத்துக் கற்றலே மிகவும் சிறப்பானது. ஒவ்வொருவரும் மிகச் சிறந்த விஞ்ஞானியாகவோ, கணிதமேதையாகவோ, சட்ட அறிஞர் ஆகவோ, இலக்கியவாதியாகவோ வருவதற்கு இலக்கு வைத்தல் மிகவும் நல்லது.

யாழ்ப்பாணத்தின் வேறு இரு பிரபல்யமான தனியார் பாடசாலைகளில் மாணவர்களின் கல்விக்கு போக்குவரத்தில் உள்ள இடையூறுகள் பற்றி ஆராய்ந்தபோது ஆண்களில் 55 வீதமானோரும், பெண்களில் 65

வீதமானோரும் ஏதாவது ஒரு தடவை மிதிபலகையில் பிரயாணம் செய்ய நேரிட்டதாக கூறினர். பேரூந்திற்காக காக்கும் நேரம் பெரும்பாலும் 20 - 30 நிமிடங்களாக உள்ளது என அறியப்பட்டது. இராணுவவாகனத் தொடரணியால் மாணவர்களின் போக்குவரத்து தென்மராட்சி மாணவர்களில் 100% பாதிப்பு காணப்பட்டது. யாழ்ப்பாண மாணவர்களில் 60% பாதிப்பு காணப்பட்டது. சோதனைச்சாவடியில் நேர விரயம் தென்மராட்சி மாணவர்களிற்கு 100% ஆகவும் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் 93.4% ஆகவும் காணப்பட்டது.

எனவே எமது மாணவர்களின் கல்வி கற்றலில் சுயமான கல்விக்கு அதிக நேரத்தினை ஒதுக்கல் அவசியம். இதற்கு மாணவர்களின் காரணிகளும் நாட்டின் யுத்த சூழலின் தாக்கமும் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர்களுக்குரிய காரணிகளை அவர்கள் ஆசிரியர்களின் உதவியுடனும் பெற்றோரின் உதவியுடனும் நேரசூசிகைப்படி கற்பதாலும் குறைக்கலாம். ஏனைய புறச்சூழல் காரணிகள் எமது சக்திக்கு அப்பாற்பட்டவை. ஆனால் பாடசாலைக்கு அருகில் மாணவர்கள் வசிப்பதால் போக்குவரத்து தொடர்பான நேர இழப்பு ஏற்பட்டு கல்வி இழப்பு ஏற்படுவதனைக் குறைக்கலாம். இவையே ஆரோக்கியமான கற்றலுக்கு உதவும்.

நன்றி

Dr.சி.யமுனாநந்தா

MBBS, DTCD

1. மாவட்ட நோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி (DTCO), யாழ்ப்பாணம்.
2. பணிப்பாளர், பிராந்திய நிலையம், பண்ணை. (Director, RTC, Jaffna).
3. பதில் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய், (Acting MOH, Kopay).
4. பொறுப்பு வைத்திய அதிகாரி, மார்புநோய் வைத்தியசாலை, (MOH, Chest Hospital, KKS).